GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT 202
LIBRARY

Register No. | | | | | | | | |

**TA6A**

**5755–23**

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

HUMAN RIGHTS LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Human Rights are generally defined as "Those rights which are inherent in our nature and without which, we cannot live as human beings": - Comment.

   "மனித உரிமைகள் மனிதாக இருப்பதாலும் மற்றும் இவ்வுரிமை இல்லையென்றால் மனிதனாக வாழ இயலாது" என பெதுவாக வரையறுக்கப்படுகிறது. - விமர்சிக்கவும்.

2. Discuss the salient features of the Universal Declaration of Human Rights, 1948.

   உலகளாவிய மனித உரிமை சாசனம் 1948-ன் சிறப்புகளை விவாதிக்க.

3. Explain the Role of NGO's for protection of Human Rights.

   அரசு சாரா அமைப்புகளின் மனித உரிமைகளை பாதுகாப்பதில் அவற்றின் பங்களிப்பை விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the Regional Convention on Human Rights.

   பிராந்திய அளவிலுள்ள மனித உரிமைகள் குறித்த உடன்படிக்கைகளை விளக்குக.

5. Analyze the "Prohibition of Genocide" as enjoyed under the international convention.

   பன்னாட்டு ஒப்பந்தததில் "இனபடுகொலையின் தடை" பற்றி கூறப்பட்டுள்ளதை ஆய்வு செய்க.

6. Discuss the rights of Women under International Human Rights law.

   பன்னாட்டு மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் மகளீர்கான உரிமைகளை விவாதிக்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Right to vote

வாக்களிக்கும் உரிமை

(b) Naga people's Movement of Human Rights v. Union of India (1997).

நாகா மக்கள் மனித உரிமை இயக்கம் எதிர் இந்திய அரசு (1997).

(c) Human Rights Court

மனித உரிமை நீதிமன்றம்

(d) Sec. 2(1)(d) of the Protection of Human Rights Act, 1993.

1993-ம் வருடத்திய மனித உரிமை பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவு 2(1) (d)

(e) Human Rights of Differently Abled.

மாற்று திறனாளிகளின் மனித உரிமைகள்

(f) Right to Self determination

சுயநிர்ணய உரிமை

(g) National Commission for Minorities

தேசிய சிறுபாண்மையினர் ஆணையம்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழங்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' Student of Government Law College, has applied on application for appointment of Law Clerk-cum-Research Assistant in the Supreme Court of India. The Registrar-General of the Supreme Court of India has refused application submitted by 'X' stating that he is not studied in college empanelled by the Supreme Court and further stated that students studied in National law Schools are alone eligible to apply. Student 'X' challenged it on the grounds of violation of Right to equality. Can 'X' win the case.

'X' அரசு சட்டக் கல்லூரி மாணவன் உச்ச நீதிமன்றத்தில் ஆராட்சி உதவியாளர் மற்றும் சட்ட கிளார்க் மற்றும் ஆராய்ச்சி பதவிக்கு விண்ணபித்தார். ஆனால் உச்ச நீதிமன்ற பதிவாளர் அவர்கள் 'X' படித்த கல்லூரியானது உச்சநீதிமன்றத்தால் இப்பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட பட்டியல் கல்லூரியில் பயிலவில்லை என்று கூறி 'X' ன் விண்ணப்பத்தை நிராகரித்துவிட்டார் மற்றும் இப்பதவிக்கு தேசிய சட்டப் பள்ளியில் படித்த மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்று கூறுகிறார். அதனால் 'X' என்ற மாணவர் சமத்துவ உரிமையை மீறிவிட்டதாக கூறி எதிர்கிறார். இவர் இவ்வழக்கில் வெற்றி பெற முடியுமா?

9. ‘A’ borrowed Rs. 5000/- from ‘B’. ‘A’ failed to repay the said amount. ‘B’ filed a suit and got decree and judgment in his favor and filed an execution proceeding wherein he sought relief of arrest and detainment in prison. The execution court has passed order accordingly. ‘A’ challenges the order as violation of right to life. Can ‘A’ win the case.

‘ஆ’ விடம் ‘அ’ ரூ. 5,000/- கடன்பட்டியிருக்கிறார். ‘அ’-வால் கடனை திருப்பி கொடுக்க முடியவில்லை. அதனால் ‘ஆ’ வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு மற்றும் தீர்பாணையை இவருக்கு ஆதரவாக பெற்றார். பின்னர் நிறைவேற்று தாக்கல் செய்து அதில் ‘அ’ வை கைது செய்து சிறையில் அடைக்க கோறியிருந்தார். நிறைவேற்று நீதிமன்றம் அவ் உத்தரவை பிறப்பித்தது. அவற்றை ‘அ’ தனது வாழ்வாதார உரிமையை மீறிவிட்டதாக வழக்கு தாக்கல் செய்கிறார். இதில் ‘அ’ வெற்றி பெறமுடியுமா?

10. ‘A’ was taken by police officer for investigation of Commission of crime without registering First Information Report (FIR). He was put in lock up in police Station. ‘A” sister –in- law went to police station and found his dead body lying in police lock-up. No step has been taken by authority to investigate the unnatural death and they have not sent to post mortem examination. Father of ‘A’ filed write petition before the High court for seeking an enquiry and to fix the responsibility on guilty officers and punish and also claimed compensation for death caused by the illegal act of the police personnel. Will Father of ‘A’ win the case?

முதல் தகவல் அறிக்கை (முதஅ) பதிவு செய்யாமல் ‘அ’ என்பவரை காவல் துறை அலுவலர்கள் குற்றம் குறித்த விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். காவல் நிலைய சிறையில் அடைத்துவிட்டனர். ‘அ’ ன் மனைவின் தங்கை காவல் நிலையம் சென்று பார்க்கும்பொழுது காவல் நிலைய சிறையில் ‘அ’ இறந்து கிடந்தார். இதை குறித்து காவல் நிலைய அதிகாரிகள் இயற்கைக்கு மாறான இறைப்பைக் குறித்து விசாரணை செய்யவோ உடற்கூறு ஆய்வுக்கோ அனுப்பவில்லை. அதனால் ‘அ’ -ன் அப்பா உயர் நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து தனது மகன் இறப்பிற்கு காரணமாக இருந்த காவல் அதிகாரிகளை கண்டுபிடித்து விசாரணை செய்து தண்டிக்கவும் மற்றும் சட்டத்திற்கு முறனான இறப்பிற்கு இழப்பீடு கோறியும் தாக்கல் செய்தார். இதில் ‘அ’ -ன் தகப்பனார் இவ் வழக்கில் வெற்றி பெறுவாரா?

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT
LIBRARY

Register No.

**TA6B**

5741-23

(For the candidates admitted from 2017–2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

CRIMINOLOGY AND PENOLOGY

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the various rights of prisoners with the help of cases decided by the Supreme Court.

   சிறை கைதிகளின் பல்வேறு உரிமைகளை உச்சநீதிமன்றத் தீர்ப்புகள் வழியாக விளக்குக.

2. Explain the factors responsible for White Collar Crime.

   செல்வாக்காளர் குற்றத்திற்கான காரணங்களை விளக்குக.

3. What are the factors responsible for delinquency among children?

   சிறார்கள் குற்றமனப்பான்மையராகுவதற்கு தாங்கள் கூறும் காரணங்கள் யாவை?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the contribution made by Italian school of Criminology.

   இத்தாலிய குற்ற ஆய்வியல் பயில் நெறியம், குற்ற ஆய்வியலுக்கு ஆற்றிய பங்கினை விவரி.

5. What is meant by indeterminate sentence. Enumerate the merits and demerits of indeterminate sentence.

   காலம் குறிப்பிடா சிறை தண்டனை என்றால் என்ன காலம் குறிப்பிடா சிறை தண்டனையின் நிறை குறைகளை எடுத்துரைக்கவும்.

6. Explain the objects of Aftercare organisation and its functioning.

   பிற்காப்பு அமைப்பு மற்றும் செயல்பாடுகளை விவரிக்க.

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) E-Mail frauds

மின்னஞ்சல் மோசடிகள்

(b) Alcoholism

குடிபோதை நிலை

(c) Incest

தகாப்புணர்ச்சி

(d) Solitary confinement

தனிமைச் சிறை

(e) Free Will theory

தன் விருப்ப கோட்பாடு

(f) Illiteracy and Crime

கல்வியின்மையும் குற்றமும்

(g) Drugs and Criminality

போதைப் பொருட்களும் குற்றத் தன்மையும்

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' kidnapped 'B' at Madurai and Wrongfully concealed him at Tirunelveli. Decide the place where 'A' can be tried.

'A' என்பவர் 'B' என்பவரை மதுரையில் கடத்தி திருநெல்வேலியில் மறைத்து வைத்தார். அவர் எந்த நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும் என்பதை தீர்மானிக்க.

9. 'A' falsely represents himself as 'B' and obtains passport under 'B's name. Discuss the liability of 'A'.

'A' என்பவர் தன்னை 'B' என்று பொய்யாக அடையாளம் கூறி 'B' என்பவர் பெயரில் பாஸ்போர்ட் வாங்குகிறார்.'A' என்பவரின் பொறுப்பு நிலையை விவாதிக்க.

10. In a bride burning case, the conduct of the husband after the incident, whether it was relevant or not? Decide.

ஒரு மணப்பெண் எரிப்பு வழக்கில், நிகழ்வு நடந்த பிறகு கணவரது நடவடிக்கை தொடர்புடைய நிகழ்மை ஆகுமா? தீர்மானிக்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
3 OCT 202
LIBRARY

Register No.

**TA6C**

**5742–23**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2023.

(Three-year Regular Course)

Third Year – Sixth Semester

INTELLECTUAL PROPERTY LAW

Time : $2\frac{1}{2}$ hours                                                                 Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each..

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Enumerate the salient features of the Trade Mark, Act 1999.

   வணிகக் குறியீடு சட்டம் 1999-ன் முக்கிய குண இயல்புகளை விளக்குக.

2. What is patent? Explain non-patentable inventions and describes the procedure to obtain the grant of patent?

   காப்புரிமை என்றால் என்ன? காப்புரிமை பெற இயலாத கண்டுபிடிப்புகள் யாவை என்று விளக்குக? மேலும் காப்புரிமை பெறுவதற்கான நடைமுறைகளை விளக்குக.

3. Discuss the origin and functions of the World Trade Organization.

   உலக வர்த்தக மையத்தின் தோற்றம் மற்றும் பணிகள் குறித்து விவாதிக்கவும்.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Define infringement of trademark and explain. What acts do not constitute infringement of trademark?

   "வணிக முத்திரை உரிமை மீறல்" என்பதனை வரையறு. எந்த செயல்கள் வணிக முத்திரை உரிமை மீறல் ஆகாது என விளக்கவும்.

5. Define surrender of patent. What circumstances a patent can be surrendered.

   காப்புரிமையை திரும்ப ஒப்படைத்தல் என்பதனை விளக்குக. எந்த சூழ்நிலைகளில் காப்புரிமையை திரும்ப ஒப்படைக்க முடியும் என்பதனை விவரமாக விளக்குக.

6. Define Neighbouring Rights.

   உடன் சார் உரிமைகள் பற்றி வரையறு.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Aravind Labouratories - Vs - Annamalai Chettiar (AIR 1981 NOC. 13)

அரவிந்த் லேபரட்டரீஸ் எதிர் அண்ணாமலைச் செட்டியார் (AIR 1981 NOC. 13)

(b) Geneva convention of copyright

பதிப்புரிமைக்கான ஜெனிவா உடன்படிக்கை

(c) Deceptive similarity

ஏமாற்றும் அளவில் ஒத்த தன்மை

(d) Anton pillar order

அண்டன் பில்லர் ஆணை

(e) TRIPS Agreement

டிரிப்ஸ் உடன்படிக்கை

(f) Copy rights in design

வடிவமைப்பின் பதிப்புரிமை

(g) Rights of patentee

காப்புரிமை பெற்றவரின் உரிமைகள்

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Ramesh is a Ayush Doctor. He has invented a new Drug from a Herbal plant to cure Covid-19. He is willing to get a patent for his invention. Advise him.

ரமேஷ் என்பவர் ஒரு ஆயுஸ் மருத்துவர். அவர் சர்க்கரை நோயினை குணப்படுத்துகின்ற மருந்து ஒன்றினை மூலிகைத் தாவரம் ஒன்றிலிருந்து கண்டுபிடிக்கின்றார். அவர் தனது கண்டுபிடிப்பிற்கு காப்புரிமை பெற விரும்புகிறார். அவருக்கு அறிவுரை வழங்கவும்.

9. Three years after the publication of a foreign work, licence is sought for translation of the work for teaching purposes from the copyright board. Will the licence be granted for the same in India?

வெளிநாட்டில் தயாரித்து வெளியிடப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவுற்ற பிறகு அதைக் கல்வி கற்பிப்பதற்கான காரணத்திற்காக மொழி பெயர்ப்பதற்கு பதிப்புரிமை வாரியத்தின் அனுமதி கேட்கப்பட்டது. இந்தியாவில் மேற்படி மொழி பெயர்ப்புக்கு உரிமம் வழங்கப்படுமா?

10. As against an existing trade mark of a particular cloth variety, a closely resembling mark was used by another manufacturer for his article. The existing trade mark owner sued the other manufacturer. Decide the remedies available to the original owner.

ஒரு துணி வகைக்கு ஏற்கனவே நடைமுறையில் உள்ள வணிக முத்திரைக்கு மிகவும் நெருக்கமானது போலுள்ள முத்திரையை இன்னொருவர் தன் பொருளுக்கு பயன்படுத்துகிறார். நடைமுறையில் பயன்படுத்திக் கொண்டிருக்கும் அம்முத்திரைக் குரியவருக்கான தீர்வு என்ன என்பதை விளக்குக.

---